# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப்பரீட்சை 2022

| | | |
|---|---|---|
| தரம் : 11 | தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் II<br>Communication and Media Studies II | நேரம் :<br>2 மணித்தியாலம் |
| சுட்டெண்:............................. | 87 T II | மேலதிக வாசிப்பு நேரம்<br>10 நிமிடம் |

- ❖ முதலாம் வினாவையும் வேறு எவையேனும் நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ❖ முதலாம் வினாவுக்கு 20 புள்ளிகளும் ஏனை எல்லா வினாக்களுக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

01. இந்த வருடத்தின் கல்விச் சுற்றுலா இலங்கையின் வரலாற்று மையங்களைப் பார்வையிடவும். அவை பற்றிய சரியான புரிதலைப் பெறவுமாக ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதாக ஆசிரியர் அறிவித்தார்.

1. புராதன கல்வெட்டு எழுத்துப் பொறிப்புகள் எவ்வகையான தொடர்பாடல் வடிவத்திற்கு உரியவை?
2. விஜயம் செய்வதற்கான இடங்களைத் தெரிவு செய்ய தொல்பொருள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வமான இணையத்தளம் பயன்படுத்தப்பட்டது. இணையத்தளமொன்றைப் பராமரிப்பதன் இரண்டு ஆதாயங்களைக் குறிப்பிடுக.
3. வரலாற்று மையங்களைப் பற்றிய தகவல்கள் அடங்கிய கணினி வழி அச்சுப்பதிப்புச் செய்யப்பட்ட (DTP) கைநூலொன்றை மாணவர்களுக்கு வழங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டது. கனினி வழி வெளியிட்டுச் செயலொழுங்கின் இரண்டு ஆதாயங்களை எடுத்துரைக்குக.
4. சுற்றுலா தொடர்பான தகவல் பரிமாற்றிற்காக தொலைபேசியைப் பயன்படுத்துவது தொடர்பாக இரு சாராரும் பின்பற்ற வேண்டிய ஒழுக்கநெறிகள் இரண்டைக் குறிப்பிடுக.
5. வரலாற்று மையங்களைப் பற்றிய தகவல்களைத் திரட்ட பயன்டக்கூடுமான இரண்டு நுட்பமுறைகளைப் பெயரிடுக.
6. விசேட நிகழ்வுகளைப் புகைப்படமெடுத்தலின் அவசியம் தொடர்பில் ஆசிரியர் வலியுறுத்தியிருந்தால் புகைப்படமெடுத்தலில் பின்பற்றப்படும் மூன்று படிநிலைகளும் யாவை?
7. மேற்படி புகைப்படங்களைப் பயன்படுத்தி, செய்திப் பத்திரிகையொன்றுக்கு கட்டுரை வரையப்பட வேண்டுமெனப் பிரேரிக்கப்பட்டது. நிலைத்த புகைப்படங்கள் வழியாக அச்சு ஊடகம் பெறும் இரண்டு ஆதாயங்களை எடுத்துரைக்க.
8. செய்தி ஒன்றில் குறித்த சுற்றுலா பற்றிய தகவலை வழங்க பிராந்திய செய்தியாளர் ஒருவர் எதிர்பார்த்திருந்தார். ஒரு சம்பவம் தொடர்பிலான செய்திப் பெறுமதியைத் தீர்மானிக்கும் இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக.
9. பாடசாலையில் நடைபெறும் ஒலி வடிவ அறிவிப்பில் சுற்றுலா பற்றிய விவரணச் சித்திரம் ஒன்றை முன்வைக்க மாணவர் குழு ஒன்று திட்டமிட்டது. பிரதி அல்லது எழுத்துரு ஒன்றை எழுதுவதற்கு முன்னர் அவசியம் கவனஞ் செலுத்தப்பட வேண்டிய இரண்டு அம்சங்களைக் குறிப்படுக.

10. வரலாற்று மையங்கள் பற்றிய தொலைக்காட்சி விவரணப்படம் ஒன்றை உருவாக்கவும் ஆலோசனையொன்று முன்வைக்கப்பட்டது. தொலைக்காட்சி விவரண நிகழ்ச்சியொன்றின் இரண்டு இயல்புகளை எடுத்துரைக்குக.

02. ‘‘சமூக சவால்களை வெற்றி கொள்வதற்குப் பொதுமக்களுக்கு உதவுவதில் வெகுசன ஊடகங்களின் வகிபங்கு போதுமானது / பொதாது’’ என்னும் தலைப்பிலான விவாதமொன்றில் பங்கேற்க உங்களுக்கு ஓர் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

1. விவாதம் எவ்வகையான தொடர்பாடல் வகையினைச் சார்ந்தது எனப் பெயரிடுக.
2. தொடர்பாடலின் அடிப்படைச் செயற்பாடுகள் இரண்டினைச் சுருக்கமாக விபரிக்குக.
3. வெகுசனத் தொடர்பாடலின் இயல்பை மூனறு முக்கிய குறிப்புக்கள் வழியாகச் சுருக்கமாக விபரிக்குக.
4. செய்திப் பத்திரிகையொன்றின் பின்வரும் உள்ளடக்க வகைகள் எவ்வாறு சமூக உயர்வுக்குப் பயன்படலாமெனச் சுருக்கமாக விபரிக்குக.

அ) ஆசிரியர் தலையங்கம்

ஆ) கேலிச் சித்திரம் கருத்து எழுத்துப் படங்கள்

இ) விவரண அல்லது சித்திரிப்பு கட்டுரைகள்

03. 1. அச்சும் இலத்திரனியலும் இரண்டு வகையான வெகுசன ஊடகங்களாகும். அச்சு ஊடகமொன்றையும் இலத்திரனியல் ஊடகமொன்றையும் பெயரிடுக.
2. விலங்குகளின் தொடர்பாடல் மானுடத் தொடர்பாடலிலும் வேறுபட்டது. எவையேனும் விலங்கினங்கள் இரண்டு தமது இனங்களுக்கிடையில் எவ்வாறு தொடர்பாடல் மேற்கொள்ளுகின்றன என்பதற்கு ஒவ்வொரு உதாரணம் வீதம் தருக.
3. அலுவலக ஊடகச் செயன்முறையில் வெவ்வேறு வகையான கருவிகள் பயன்படுதப்படுகின்றன. அலுவலக ஊடக கருவிகளான முத்திரையிடல் இயந்திரங்களின் மூன்று வகையான செயற்பாடுகளை விளக்குக.
4. வானொலிப் பிரதியாக்கம் ஒன்றில் பின்வரும் அம்சங்கள் பயன்படுத்தபப்டுவதன் முக்கியத்துவத்தை உதாரணங்களுடன் விளக்குக.

அ) இசை

ஆ) ஒலிக்குறிப்புக்கள் (Sound effects)

இ) தொழில்நுட்பச் சொற்கள்

ஈ) மொழியின் நிறுத்தற் குறிகள்

04. 1. இலங்கையின் வெளியான முதலாவது செய்திப் பத்திரிகை எது?
2. செய்தி அறிக்கையொன்றுக்கும் படைப்பாக்க கட்டுரையொன்றுக்கும் இடையிலான இரண்டு வேறுபாடுகளைச் சுருக்கமாக விளக்குக..
3. செய்திப் பத்திரிகைத்துறையில் பதவிநிலை மற்றும் பிராந்திய நிலைகளில் பணியாற்றும் ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளை மூன்று முக்கிய குறிப்புக்கள் வழியாக விளக்குக.
4. அபிவிருத்திசார் சிந்தனைக்கு தெரிவு செய்யப்பட்ட வெகுசன ஊடகமொன்று எவ்வாறு பங்களிப்புச் செய்ய முடியும் என்பதைக் கீழே தரப்பட்ட நான்கு குறிப்புக்களைப் பயன்படுத்தி விவரணக் கட்டுரையொன்று வரைக.

அ) சவால்களை எதிர்கொள்ளல்

ஆ) பணியாற்ற ஊக்குவித்தல்

இ) தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல்.

ஈ) படைப்பாக்க வேலைகளை உருவாக்குதல்

05. அமரா தனது பள்ளித் தோழியான லக்ஷ்மிக்கு தொலைபேசியில் அழைப்பு எடுத்து தன்னால் தவறவிடப்பட்ட செவிப்புல – கட்புல உபகரணங்கள் பாடம் பற்றிய விடயங்களைக் கேட்டறிந்தார்.

1. வானொலியில் இடம்பெறும் தொலைபேசி உரையாடல் நிகழ்ச்சி வடிவத்தின் சிறப்பம்சங்கள் இரண்டினைப் பெயரிடுக.
2. இருவழித் தொடர்பாடலின் தேவை தொடர்பாக இரண்டு விடயங்களினூடாக விளக்குக.
3. தொலைபேசி மூலமாகத் தொடர்புபடும் இரு தரப்பினராலும் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்கநெறிகள் மூன்றினை விவரிக்குக.
4. பாடத்துடன் தொடர்புடைய தகவலை வழங்குவதற்காக லக்ஷ்மி மின்னஞ்சலைப் பயன்படுத்தினார் எனின் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் நான்கினை விவரிக்குக.

06. தொடர்பாடல் தகவல் ‘‘பரிவர்த்தனை’’ என அறியப்படும்.

1. நவீன தகவல் பரிவர்த்தனையின் போது பயன்படுத்தப்படும் இலத்திரனியல் செய்திப் பத்திரிகைகளின் பொதுப் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.
2. தமது வியாபார நிலையத்திற்குக் குநந்தூர தொலைக்காட்சிச் சுற்றுக் கமராவினைப் (CCTV) பயன்படுத்த உரிமையாளர் முடிவு செய்தார். இதன் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகளை இரண்டினை விவரிக்குக.
3. வெகுசன ஊடகத்தின் மூலம் முன்வைக்கப்படும் தகவல் சிறுவரது சமூக வாழ்க்கையில் செலுத்தக்கூடிய தாக்கம் பற்றி மூன்று விடயங்களினூடாக விவரிக்குக.
4. கீழ்க்காணும் விடயங்களுள் இரண்டு விடயங்கள் தகவல் அறிக்கையிடலின் போது முக்கியத்துவம் பெறும் விதத்தினை விவரிக்குக.

அ) துல்லியத் தன்மை

ஆ) நடுநிலைத் தன்மை

இ) தெளிவான தன்மை

ஈ) நம்பகத் தன்மை

07. இலங்கை பிரசையான பிரபா கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது தனது வாக்கை முதற் தடவையாகப் பயன்படுத்தினார்.

1. இலங்கைப் பிரசையொருவர் கொண்டிருக்க வேண்டிய இரண்டு பண்புகளைப் பெயரிடுக.
2. ஜனாதிபதி தேர்தலின் போது பிரசார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப் பொருத்தமான வானொலி நிகழ்ச்சி வகைகள் இரண்டினைச் சுருக்கமாக அறிமுகம் செய்க.
3. தேர்தல் மேடையொன்றின் வேட்பாளர் ஒருவர் ஆற்றும் உரையைக் காட்சிப்படுத்தும் போது இலக்கமுறை புகைப்படக்கலை (Digital Photography) பயன்படுத்தப்படுவது மிகவும் பொருத்தமானது. அதற்கான மூன்று காரணங்களை விவரிக்குக.
4. தேர்தலுக்காக இடம்பெறும் குழு ஒன்று கூடல்களின் போது பயன்படுத்தப் பொருத்தமான எறிவையற்ற உபகரணங்கள் நானகின் பொருத்தப்பாட்டினை விளக்குக.